| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **153/2018** |
| **தேதி** | **:** | **02.04.2025** |
| **பெயர்** | **:** | **திரு. வீரராகவன் த/பெ தேவராஜ்** |

பி.வா.த.சா.1. / (DW1) திரு. வீரராகவன் த/பெ தேவராஜ் என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>பி.வா.த.சா.1/ (DW1) - குறுக்கு விசாரணை</u>**

1) இவ்வழக்கின் 1ம் வாதி எனது தாயார் என்றால் சரிதான். 2ம் வாதி எனது உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். எனது தந்தை தேவராஜ் எப்போது இறந்தார் என்றால் 2008 ம் வருடம் இறந்தார். எனக்கு எப்போது திருமணமானது என்றால்07.03.1988 ம் தேதி திருமணம் ஆனது. எனது திருமணத்தின் போது 1988 ம் ஆண்டு நான் எனது தந்தை, தங்கையுடன் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு பின்னர் தான் வேலைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. 1979 ம் வருடத்தில் இருந்து வேலைக்கு சென்று வந்தேன்.

2) எனது தந்தை தான் குடும்பத்தின் வரவு செலவு கணக்குகளை பார்த்து நிர்வகித்தார் என்றால் சரிதான். நானும் பார்த்துக்கொண்டேன். எனது தந்தை உயிருடன் இருக்கும் வரை குடும்பத்தின் வரவு செலவு கணக்குகளை பார்த்து நிர்வகித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு எழுத படிக்க தெரியாது. எனவே நான் தான் முன்இருந்து பார்த்துக்கொண்டு நிர்வகித்து வந்தேன். எந்த வருடத்தில் இருந்து குடும்பத்தின் வரவு செலவு கணக்குகளை பார்த்து வந்தேன் என்றால் 1980 ம் வருடத்தில் இருந்து பார்த்து வருகிறேன்.

3) எனது பிரமாண வாக்குமூலத்தில் மற்றும் எனது பதில் உரையில் 1980 ம் வருடத்தில் இருந்து எனது குடும்பத்தின் வரவு செலவு கணக்குகளை நான்தான் பார்த்து நிர்வகித்து வந்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் அது குறித்து தெரியவில்லை. எனக்கும் எனது மனைவிக்கும் எவ்வளவு வயது வித்தியாசம் இருக்கும் என்றால் 8 வயது இருக்கும். 1980 ம் வருடம் தாவா சொத்து எவ்வளவு ரூபாய்க்கு மறுபயன் வாங்கப்பட்டது

என்றால் 8000 ரூபாய்க்கு வாங்கப்பட்டது. தாவா சொத்து கிரயப்பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் நாகமணி மற்றும் துரைக்கண்ணு ஆகும். 1980 ம் வருடம் தாவா சொத்து எனது தந்தை மற்றும் தாயார் சம்பாதித்த பணத்தில் இருந்து எனது பெயருக்கு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் 1980 ம் வருடம் வேலைக்கு சென்று தாவா சொத்து எனது வருமானத்தில் வாங்கப்பட்டது என்பதை நிருபிக்க ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

4) 2000ம் ஆண்டில் 2ம் பிரதிவாதிக்கு நான் என்ன எழுதிக்கொடுத்தேன் என்றால் கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன். மேற்படி பிதசாஆ 2 கிரயப்பத்திரம் எனது தந்தையோ, தாயாரோ சாட்சிக்கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பிதசாஆ 2 கிரயப்பத்திரத்தில் எழுதியபோது எனது தாயார் மற்றும் எனது தந்தை உயிருடன் இருந்தார்கள் என்றால் சரிதான். பிதசாஆ 2 கிரயப்பத்திரத்தை எந்த மருபயனும் வாங்காமல் கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்லடி. மறுபயன் பெற்று தான் வாங்கி கொடுத்தேன். பிதசாஆ 2 கிரயப்பத்திரம் எவ்வளவு மறுபயனாக பெற்றேன் என்றால் ரூபாய் 3 லட்சம் பெற்றேன். பிதசாஆ 2 கிரயப்பத்திரத்தில் உள்ள சங்கதிகள் நான் கூறிதான் பத்திர எழுத்தர் எழுதினார் என்றால் சரிதான்.

5) பிதசாஆ 2 கிரயப்பத்திரத்தில் எனது வயது 35 என்ற குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது வயது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிதசாஆ 2 கிரயப்பத்திரத்தின் படி 2000ம் ஆண்டில் எனது வயது 35 என்றால் 1980 ம் ஆண்டு எனது வயது 15 என்றால் சரியல்ல. பிதசாஆ 2 கிரயப்பத்திரத்தில் எனது வயது தவறுதலாக உள்ளது. எனது வயதை நிருபிக்க என்னிடம் ஆவணம் உள்ளது. எனது மனைவி இல்லத்தரசி என்றால் சரிதான். நான் பிதசாஆ 2 கிரயப்பத்திரத்திற்காக எந்த மறுபயனும் பெறாமல் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தேன் என்றாலும், வாதிகளை ஏமாற்றும் நோக்கத்தில் தான் செய்தேன் என்றால் சரியல்ல.

6) மறுபயன் ஏதும் பெறாமல் நான் எழுதிக்கொடுத்த பிதசாஆ 2 கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிதசாஆ 2 கிரயப்பத்திரம் எனது தாய் தந்தைக்கு தெரியாமல் அவர்களை ஏமாற்ற வேண்டும் நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது தாய், தந்தைக்கு தெரியும். தாவா சொத்து எனது தாய் தந்தை உழைப்பில் தான் வாங்கப்பட்டது என்றாலும், பிதசாஆ 2 கிரயப்பத்தை 2ம் பிரதிவாதிக்கு எனது

தாய் தந்தைக்கு தெரியாமல் அவர்களை ஏமாற்றும் நோக்கத்தில் அவர்களுக்கு தெரியாமல் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாங்கப்பட்ட 1980 ம் ஆண்டு நானும், எனது தாய், தந்தையும் கூட்டுக்குடும்பத்தோடு தான் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். எனவே தாவா சொத்தில் வாதிகளுக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. I. Vino,
District Munsif,
Sriperumbudur.